எக்ஸ்பர்டைஸ் இல்லை என்று தெரியப்படுகிறது. இன்றைக்கு மாநகராட்சியிலே இருக்கிற பொறியாளர்களுடைய தன்மை, அவர்களுடைய எக்ஸ்பீரியன்ஸ், இவைகளை எல்லாம் பார்க்கிறபோது, இப்படிப்பட்ட பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் வாரியத்திடம் இருப்பதுதான் நல்லது என்ற நல்ல முடிவை அரசு மேற்கொண்டிருக்கிறது.

காரணம், சில பெரிய பிரச்சினைகளை மேற்கொள்கின்றபோது மாதக் கணக்கில் குடிநீர் வழங்கமுடியாத நிலை எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் கார்ணத்தினாலேதான் அரசு சிந்தித்து இப்படிப்பட்ட பெரிய குடிநீர் திட்டங்களை எல்லாம் தன்னகத்தே பலதரப்பட்ட பொறியாளர்களைக் கொண்டிருக்கிறது. பலதரப்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. திறம்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்கள் இதை எடுத்து மெயின்டெயின் செய்தால்தான் இது சிறப்பாக இருக்குமென்பதை கருத்திலே கொண்டுதான் இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல உத்தரவை அரசு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 338, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

338--

சிற்றார் காலனி இலங்கை அகதிகளின் வாரிசுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை வழங்குதல்

***20174–திரு. மா. சுந்தரதாஸ் :**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிற்றார் காலனியில் உள்ள இலங்கை அகதிகளின் வாரிசுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை அளிக்க மறுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அகதிகளின் வாரிசுக்கு வேலை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிற்றார் காலனியில் உள்ள ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை

அளிப்பதில் மறுப்பு ஏதும் இல்லை. மைய அரசு மற்றும் இதர விதிமுறைகளின்படி தாயகம் திரும்பிய வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது.

(ஆ) தாயகம் திரும்பியவர்களின் வாரிசுக்கு வேலை மறுக்கப்படுவதில்லை. எனவே கேள்வி எழவில்லை.

டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியைக் கேட்டு கடந்த வாரம் அதற்குப் பதிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் விரிவான ஒரு விளக்கத்தை அளித்திருந்தார்கள். அதில் இலங்கை அகதிகளின் வாரிசுகளுக்கு வாரிசு அடிப்படையில் ரப்பர் கழகத்தில் வேலை வழங்கப்படும்; அதற்கு ரேஷன் கார்டில் பெயர் உள்ளவர்களுக்கு வேலை வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் பக்கத்து மாநிலத்திலிருந்து இங்கே வந்து அவர்கள் அகதிகள் என்று சொல்லிக் கொண்டு, அதில் வேலை கேட்பதினால் குழப்பம் ஏற்படுகிறது. எனவே ஏற்கெனவே கூறியதைப்போல அகதிகளின் வாரிசுகளுக்கு வேலை அளித்தமைக்கு நன்றிக்கூறி, அந்தப் பகுதியிலே இருக்கும் மற்றவர்களுக்கும் வேலை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே இதே கேள்வியைக் கேட்டபோது அந்தக் குடும்பங்களுக்கு வேலை அளிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். தாயகம் திரும்பி வந்துள்ள 225 குடும்பங்களில் உள்ள வாரிசுதாரர்களுக்குத் தான் வேலை அளிக்கப்படுகின்றது. அதுவும் குடும்ப அட்டையில் பெயர் இல்லாதிருந்தால் அவர்கள் வாரிசுதாரர்களாக எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. வேலைவாய்ப்பும் அளிக்கப்படுவதும் இல்லை. எனவே குடும்ப அட்டையில் பெயர் இருக்கின்றவர்களுக்குத்தான் அவர்களை வாரிசுதாரர்களாக எடுத்துக்கொண்டு வேலை அளிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 339, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

339–

ஆலங்குளம் ஒன்றியத்தில் சீர்மரபினருக்கு இலவச வீடுகள் கட்டுதல்

20728-திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–